REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 5] சென்னை: ஆனி 26உ புதன் (10—7—57) ★ ★ வெளியீடு: ஆனி 27உ வியாழன் (11—7—57) [இதழ் 21

பாராளுமன்றச் செலவு அதிகரிக்கிறது!

கல்கத்தா, ஜூலை 10—

1956—57-ம் ஆண்டில் மக்கள்சபைச் செலவு ரூ.94,84,000 ஆக இருந்தது; இந்த 1957—58-ம் ஆண்டில் ரூ. 1,21,36,000 ஆக உயர்ந்திருக்கிறதாம்!

1957—58-ம் ஆண்டில், அதிகமாகத் தொகை ஒதுக்கப்பட்டிருப்பதற்குக் காரணம், ஏராளமான பாராளுமன்ற தூதுக்குழுக்கள் வெளிநாட்டிற்கு அனுப்பப்படுவதினாலும், வெளிநாடுகளிலிருந்து தூதுக்குழுக்கள் வருவதினாலும், காமன்வெல்த் பாராளுமன்றச் சங்கத்தின் மாநாட்டினை இந்தியாவில் நடத்தவிருப்பதினாலும்தான் என்று கூறப்படுகிறது. மேலும் பாராளுமன்ற அலுவலகமும் விரிவுபடுத்தப்பட இருக்கிறதாம்!

'நேருவின் ஆட்சிக் காலத்திலேயே திராவிட நாடு பெற்றாக வேண்டும்'

'அவருக்குப் பின் வருவோர் மத மொழி வெறியரா யிருப்பர்'

'வரப்போகும் பத்து ஆண்டுக் காலத்தில் கழகத்தின் பணி தீவிரமாக வேண்டும்'

சென்னை நிதி அமைச்சருக்கு அண்ணா தரும் பதில்

கேரள சர்க்கார் கைவிடுகிறது

அன்னியர் தோட்டங்கள் தேசிய மயமாக்காது?

தென்காசி, ஜூலை 9—

கேரளத்தில் உள்ள அன்னியருக்குச் சொந்தமான தோட்டங்களை தேசிய மயமாக்குவது என்ற திட்டத்தைத் தற்காலிகமாகக் கைவிட்டு விட்டதாக கேரள முதன் மந்திரி நம்பூதிரிபாத், மற்றும் அச்சுதமேனன் ஆகியோர் பத்திரிகையாளரிடம் கூறியுள்ளனர்.

தென்னாட்டுத் தியாகிக்கு அஞ்சலி செலுத்துவர்!

வ. உ. சிதம்பரனாருக்கு நினைவாலயம் ஏற்படுமாம்

எட்டயபுரம், ஜூலை 10—

இந்திய சுதந்திரப் போராட்டத்தில் பெரும் பங்கு கொண்டு அந்நிய ஆட்சியை எதிர்த்துப் போராடிய தென்னாட்டுத் திலகம் வ. உ. சிதம்பரம் அவர்கள் பிறந்த ஊருக்குச் சென்று, அவர் குடியிருந்த வீட்டைப் பார்வையிட்டு, அங்கு அவர் நினைவாகச் சுதந்திர தினத்தன்று நினைவாலயம் ஏற்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

உம்துரு நீர் மின்சாரத் திட்டம்

ரூ. 2 கோடி செலவில் உருவாக்கப்படும் உம்துரு நீர் மின்சாரத் திட்டத்தை நேற்று அசாம் கவர்னர் சையத் பசல் அலி துவக்கிவைத்துள்ளார்.

உம்துருவின் 170 அடி உயர நீர் வீழ்ச்சியை மின்சார உற்பத்திக்காக இத்திட்டத்தின் மூலம் பயன்படுத்தப்படுமாம்.

கொழும்பு திட்டத்தின்கீழ் கனடாவின் உதவியுடன் இங்கு 8,400 கிலோவாட் மின்சார உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

வெள்ளப்பெருக்கு, பெரும் மழை இவற்றினால் இரயில்பாதைகளுக்கும், இரயில் பாலங்களுக்கும் சேதமேற்படாமல் அடிக்கடி கவனித்து வருவதற்காக ஒவ்வொரு மாநிலத்திலும் என்ஜினீயர்களின் நிரந்தரக் குழு ஒன்றை ஏற்படுத்த வேண்டுமென்று இரயில்வே போர்டு எல்லாமாநிலங்களுக்கும்யோசனை கூறியிருக்கிறதாம்!

"நிதியமைச்சர் சுப்பிரமணியத்திற்குச் சொல்லுவேன்—10 வருடத்திற்கு சும்மாயிருக்கவேண்டுமென்று சொல்லுகின்றாரே, அவருக்கு நான் பணிவன்போடு சொல்லிக்கொள்வேன்—'திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பணி இந்த 10 ஆண்டு காலத்திலேதான் மிகத் தீவிரமாக இருக்கப்போகிறது—இருக்க வேண்டும். எட்டிக்குப் போட்டியாகச் சொல்லுகின்றேன் என்று கருதவேண்டாம்; துவக்கத்திலேயே சொன்னேன்—அவரிடத்திலே எனக்கு நல்ல மதிப்பிருக்கிறது'—என்று!

"இந்த 10 வருடத்திலே ஏன் அதிக வேலை இருக்கிறதென்றால், இந்த 10 வருடத்திற்குப் பிறகு நேரு பண்டிதருடைய கரத்தினுடைய வலிவு எந்த அளவுக்கு இதே நிலையில் இருக்குமென்று நம்மாலே சொல்லமுடியாது. இன்னும் ஒரு 10 வருடத்திற்குள்—நேரு பண்டிதருடைய காலத்திற்குள்ளாகவே திராவிட நாட்டைப் பெற்றால்தான், சமாதானத்தோடு பெறமுடியும். நேருவுக்குப் பிறகு திராவிட நாட்டை பெறுவதென்றால்—நண்பர்களே! நீங்கள் எழுதிவைத்துக்கொள்ளுங்கள்!—பலாத்கார வெறிச்செயலுக்குப் பிறகுதான் திராவிட நாடு கிடைக்கும்.

"பலாத்கார வெறிச்செயலிலே திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு நம்பிக்கையோ—நாட்டமோ இல்லாத காரணத்தாலேதான், 'உலகத்திற்கெல்லாம் நீதி போதிக்கின்றவர்—பஞ்சசீலத்தை பாருக்கெல்லாம் அளிக்கின்றவர்—ரஷ்யாவும் அமெரிக்காவும் மோதிக்கொள்ளாமல் பார்த்துக்கொள்கின்றவர்—அங்கேரியில் நடைபெற்ற அக்கிரமத்தை கண்டிக்கின்றவர்—பர்மாவில் நடைபெறும் அமளியை வேண்டாமென்று சொல்லுகின்றவர்—இப்படிப்பட்ட ஒரு நல்லவர் டெல்லியிலே ஆட்சியிலே இருக்கின்ற இந்தக் காலத்திலேதான் நம்முடைய குறைகளை எடுத்துச்சொல்லி—நம்முடைய உரிமைகளை வலியுறுத்திச் சொல்லி—நியாயமான கோரிக்கையை எடுத்துச்சொல்லி—நம்முடைய நாட்டினுடைய விடுதலையைக் கோருகிறோமே தவிர, இந்த 10 வருடம் சும்மாயிருந்துவிட்டு—நேரு பண்டிதரைப்போல் பண்பு படைத்த தலைவர்கள் காலத்திலே சும்மாயிருந்துவிட்டு, அதற்குப் பிறகு வட நாட்டிலே பிற்காலத்திலே வரக்கூடிய ஒரு இந்துமத மொழிவெறியன் எவனாவது பதவிக்குவந்து பக்கத்தில் இருக்கிற பாகிஸ்தான்பேரிலே வம்புக்காக அவன் படையெடுத்துச் சென்று நாட்டிலே ஒரு பெரிய அமளியை ஊட்டியான பிறகு நீங்களும் நானும் திராவிடநாட்டு பிரிவினையைப் பற்றி நியாயம் கேட்டால் எப்படிக் கிடைக்கும்?"

என்று, அண்ணா அவர்கள் 6—7—57 அன்று மாலை கோடம்பாக்கம் தி. மு. கழக 4-வது ஆண்டு விழாவில் பேசுகையில் குறிப்பிட்டார்; அவரது சொற்பொழிவின் முற்பகுதி நேற்றைய இதழில் வெளிவந்துள்ளது; பிற்பகுதி இங்கு தரப்படுகின்றது:—

"நிதி அமைச்சர் சுப்பிரமணியம், சட்டமன்றத்தில் நமது கழகத் தோழர்கள் எடுத்துச் சொன்ன அத்தனை வாதங்களுக்கும் மூன்று வகையான பதிலை அளித்ததை நீங்கள் பத்திரிகையிலே பார்க்கலாம். அதில் முதல் வகையான பதிலில், அவர் தன்னை ஒரு ஆசிரியராக ஆக்கிக்கொண்டார்; இரண்டாவது வகையான பதிலில்—அவர் ஒரு வக்கீலாக மாறினார்; மூன்றாவது பதிலில்—அவர் வியாபாரியாக வடிவமெடுத்தார்.

"முதல் பதிலில் ஆசிரியராக இருந்தார் என்று சொன்னதற்குக் காரணம், எங்களையெல்லாம் பார்த்து அவர் சொன்னார்—'இவர்களுக்கெல்லாம் பாவம், அனுபவமில்லை; ஆகையினால், எதை எதையோ பேசுகின்றார்கள்'—என்று! அவர் கவனித்தாரோ இல்லையோ—எங்களுக்கு அனுபவமில்லை; ஏதேதோ பேசுகின்றோம்—என்று எங்களைப் பார்த்து அவர் சொன்ன நேரத்தில், நான் யாரைப் பார்த்தேனென்றால்—கக்கனைப் பார்த்தேன்; லூர்தம்மையாரைப் பார்த்தேன்; வெங்கட்ராமன் அவர்களைப் பார்த்தேன்; இராமையா அவர்களைப் பார்த்தேன்.

"அந்தப் பார்வையினுடையப் பொருள்—'எங்களுக்கும் அதிக அனுபவமில்லை, மந்திரிமார்களே! உங்களுக்கும் கூட இல்லை. அதைத்தான் மந்திரி சொல்லுகின்றாரே தவிர, வேறு ஒன்றுமில்லை'—என்பதுதான்! அதை சுப்பிரமணியம் புரிந்து கொண்டாரோ இல்லையோ, மற்ற மந்திரிமார்கள் தெரிந்திருக்கக்கூடும். அந்த வகையிலே நிதி அமைச்சர் சுப்பிரமணியம் ஆசிரியர் வடிவமெடுத்து, 'நீங்களெல்லாம் அனுபவம் பெறுங்கள்' என்றார்.

"இரண்டாவது பதிலில், 'வக்கீலாக வடிவெடுத்தார்' என்று உங்களுக்குச் சொன்னேன்; அது எந்தவகையிலே என்றால், நாங்கள் சொல்லாத ஒன்றை எடுத்து வைத்துக் கொண்டு, சொன்னதாக அவராகக் கற்பனை செய்து கொண்டு அதற்குப் பிறகு வாதங்களை செய்தார்.

"உதாரணத்திற்கு உங்களுக்குச் சொல்லுவேன்—எட்டும் நான்கும் பதினைந்து என்று ஒப்புக்கொண்டால், பதினைந்தும் ஐந்தும் இருபதுதான்; இந்தக் கணக்கிலே ஒன்றும் தப்பில்லை. பதினைந்தையும்—ஐந்தையும் கூட்டினால் இருபது; ஆனால் எட்டும் நான்கும் பனிரண்

(4-ம் பக்கம் பார்க்க.)

உ. பி. மாநில முதல்வரின் பேராசை!

மேலும் பல தொழிற்சாலைகள் வேண்டுமாம்

பிரத்தியேகமான பிரச்சினைகள் உள்ளனவாம்

டெல்லி அவற்றைக் கவனிக்கவேண்டுமாம்

இலட்சுமணபுரி, ஜூலை 9—

"உத்திரப்பிரதேசத்தில் மேலும் பல தொழிற்சாலைகளை அமைக்கவேண்டியது மிக அத்தியாவசியமானதாகும்"

என்று, உ. பி. முதல்வர் டாக்டர் சம்பூர்ணனந்தா கூறியிருக்கிறாராம்!

"மாநிலத்தின் வேலை வாய்ப்புகள் தொழிற்சாலைகளை அமைப்பதின் மூலம்தான் அதிகரிக்க முடியும்"

என்றும், அவர் உ. பி. காங்கிரஸ் கமிட்டியில் பேசும்போது கூறினாராம்!

மேலும் பேசிய அவர் குறிப்பிட்டதாவது:—

"மாநிலத்தில் ஒரு அலுமினியம் தொழிற்சாலையும், ஒரு செயற்கை இரப்பர் உற்பத்தித் தொழிற்சாலையும் நிறுவுவதாக மத்திய சர்க்கார் கூறியிருந்தனர்; ஆனால் இப்போது, இந்த விஷயம் குறித்துப் பரிசீலனை செய்து வருவதாக அவர்கள் கூறுகின்றனர். இதுபற்றி மாநில சர்க்கார் டெல்லிக்குக் கடிதம் எழுதியுள்ளனர். அதே போல, மின்சார இயந்திர உற்பத்தித் தொழிற்சாலையை இங்கு நிறுவுவதாகவும் கூறிவிட்டு, பின் இப்போது, அதனை போபாலில் நிறுவப் போவதாக அறிவித்துவிட்டனர்.

"மத்திய சர்க்காருக்கும் இதர மாநில சர்க்கார்களுக்கும் நமது மாநிலத் தேவைகள் பற்றி—பிரச்சினை பற்றி எதுவும் தெரிவதாகக் காணோம். எவ்வளவு பெரிய மாநிலம் எத்தனை நகரங்களையுடையது? மக்கள் தொகைதான் எவ்வளவு அதிகம்? அப்படிப்பட்ட உ. பி. மாநிலத்திற்கு பிரத்தியேகமான பிரச்சினைகளிருக்கின்றன என்பதை அவர்கள் உணருவது நலமாகும்."

ரூ. 10 கோடி செலவில் வடநாட்டு ஆற்றுத் திட்டத்தின் முன்னேற்றம்

நாசம் விளைவிப்பதைத் தடுப்பதற்காகவாம்!

பாட்னா, ஜூலை 10—

கோசி ஆற்றுத் தண்ணீர் கட்டுக்கடங்காது கரைபுரண்டு சுற்றுப்புறங்களில் நாசத்தை விளைவிப்பதைத் தடுப்பதற்காக உருவாக்கப்பட்ட திட்டத்திற்கு இதுவரை ரூ 10 கோடி செலவிடப்பட்டுள்ளதாம்!

"150 மைல் தூரத்திற்குக் கரையைப் பலப்படுத்த ரூ. 4 கோடி செலவிடப்பட்டிருக்கிறது" என்று, மத்திய நீர்ப்பாசன அமைச்சர் பட்டீல், நிரு[illegible]களிடம் தெரிவித்துள்ளார்.

இந்தத் திட்டம் முழுவதும் நிறைவேற்றப்பட்ட பின்னர் ஆற்றின் வேகத்தைக் கட்டுப்படுத்த முடியுமாம். இதுவரை ஆண்டுதோறும் இன்னல்களுக்குட்பட்ட மக்களுக்கு இந்தத் திட்டம் நல்ல பயனைத் தருமாய்!

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 10—7—57 புதன்

அங்கும் இங்கும்!

'இந்தியாவை ஆட்சி புரியும் மாநிலம்' என்ற குற்றச்சாட்டிற்கு ஆளாகியிருக்கும் உத்திரப் பிரதேச மாநிலத்தின் முதன் மந்திரி தனது கட்சிக் கூட்டத்தில் பேசுகையில், தங்கள் மாநிலத்தில் மேலும் பல தொழிற்சாலைகள் நிறுவப்பட வேண்டும் என்றும், தங்களுக்கென உள்ள சில பிரத்தியேகமான பிரச்சினைகளை மத்திய சர்க்காரும், இதர மாநில சர்க்கார்களும் உணருவதாகக் காணோம் என்று கூறியதாகவும் வெளியாகியுள்ள செய்தியை வேறோரிடத்தில் வெளியிட்டிருக்கிறோம்.

பல நூறு கோடி ரூபாய் செலவில் டெல்லி சர்க்காரால் நிறைவேற்றப்பட்டுவரும் பல துறை வளர்ச்சித் திட்டங்கள் அனைத்தும் வட நாட்டிற்கென்றே தயாரிக்கப்பட்டவையாக இருக்கின்றன என்பதும், இந்தத் திட்டங்களில் எதுவும் தென்னாட்டிற்கு கிஞ்சிற்றும் பலன் தரப்போவதில்லை என்பதும், பலமுறை சொல்லி அலுத்துப் போய்விட்ட உண்மைகளாகும்.

வடவர் அனைவருமாகக் கூடி தென்னவரை வஞ்சித்து, தென்னாட்டின் செல்வாதாரங்களைச் சுரண்டி, தங்கள் நாட்டின் செல்வ வளர்ச்சியை மனோவேகத்தில் முடுக்கிவிட்டிருப்பதையும் உலகு அறியும்.

தென்னவரை வஞ்சித்துத் தங்களுக்கு மட்டுமே என்று ஏகபோகமாக்கிக் கொண்ட இந்த வளர்ச்சித் திட்டங்களைத் தங்களுக்குள்—தங்கள் நாட்டின் பல மாநிலங்களுக்குள் பங்கு போட்டுக் கொள்வதில் வடவர், மயிர்பிடிச் சண்டையிட்டுக் கொண்டிருக்கின்றனர் என்பதையும் தெரிந்துகொள்ள பூதக்கண்ணாடி ஒன்றும் தேவையில்லை.

'அசாமில் ஊறும் எண்ணெயை அறுநூறு மைல்களுக்குக் குழாய் மூலம் கொண்டுவந்தேனும், எங்கள் மாநிலத்தில்தான் அதனை பெட்ரோலாக வடித்தெடுக்க வேண்டும்' என்கின்றனர், பிகாரிகள்!

'இந்த அநியாயத்தைச் சகியோம்; எங்கள் குருதியை 'இன்னொருவர்' உறிஞ்சுவதற்கு இடம் தரோம்' என முழங்குகின்றனர், அசாம் மக்கள்!

'இந்த முழக்கம், 'அகில இந்தியா' என்ற அரசியல் தத்துவத்திற்குத் தரும் சாட்டையடியின் பேரொலிகூட நமக்குக் கேட்கத்தான் செய்கிறது.

'பாரத மாதா'வின் 'ஒருமைப்பாட்டி'ற்குப் பெரும் களங்கமும் விளைவிக்கிறதே 'குறுகிய பிரதேச மனம்' படைத்த அசாமியரின் இந்தக் கூச்சல் என்றுகூட, 'அகில இந்தியா'க்கள் ஓலமிடவும் கூடும்!

ஆனாலும், உ. பி. மாநிலத்தவர், தங்கள் மாநிலத்தில் கனமின்சார இயந்திரத் தொழிற்சாலை இல்லையே—போபாலில் அல்லவா நிறுவுகிறார்கள் என்று **அங்கலாய்க்கின்றனர்!**

அசாமியரோ, 'எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலை இங்கு இல்லாவிட்டால் உறவு முறியும்—பகை மூளும்,' என்று அனல் கக்குகின்றனர்!

தென்னாட்டிற்கு ஏதுமில்லை; எல்லாம் நமக்கே' என்று ஆங்கிக் கொண்ட வஞ்சக நெஞ்சம் கொண்ட வடவர், இன்று தங்களுக்குள் 'அடிதடி'யில் ஈடுபட்டிருக்கின்றனர், பங்குத் தகராறு காரணமாக என்பதை, இந்தச் செய்திகள் கூறவில்லையா?

மின்சார சாதனத் தொழிற்சாலை தங்கள் மாநிலத்தில் இல்லாமற் போய்விட்டது கண்டு கொதிக்கிறார், உ. பி. முதல்வர்!

ஆனால், அந்தத் தொழிற்சாலை போபாலில்தான்—அண்டை மாநிலமான மத்தியப் பிரதேச மாநிலத்தில்தான் நிறுவப்பட இருக்கிறது. அந்த மாநிலத்திலும் உ. பி. மக்களின் சுற்றமும் உற்றாரும்தான் வாழ்கின்றனர். அவர்கள் இந்தத் தொழிற்சாலையின் பயனைப் பெறுவதை உ. பி. முதல்வரால் சகித்துக்கொள்ள முடியவில்லை: சகாக்களைக் கூட்டிவைத்துப் பேசுகிறார்.

ஆனால் இங்கோ? அதே கனமின்சாரத் தொழிற்சாலை ஆவடியில் நிறுவப்படும்... நிறுவப்படமுடியும் என்ற செய்திகள் வந்தன; மாநில முதல்வர் காமராசர்கூட நம்பிக்கை தெரிவித்தார்; ஆனாலும் 'ஆவடியில் இல்லை,' என்ற போது, மாநில முதல்வரின் வாயிலிருந்து கண்டனம்கூட அல்ல—ஒரு முணுமுணுப்புக்கூட வரவில்லை!

'போனால் போகிறது,' என்ற பேச்சுத்தான் அடிப்பட்டது, சர்க்கார் வட்டாரங்களில்!

'ஆவடியிலிருந்தால் என்ன—போபாலில் இருந்தால் என்ன? எல்லாம் இந்தியாவில் தானே இருக்கின்றன? எதற்கெடுத்தாலும் வடநாடு—தென்னாடு என்று ஏன் பேதம் பேசுகிறீர்கள்?' என்று, கூறுகிற 'அகில இந்தியா'க்களைத்தான், இந்த நாட்டில் நம்மால் காண முடிகிறது.

ஆனால் அங்கோ?

'எங்கள் மாநிலத்தில் ஏன் இல்லை?' என்ற கேள்வி, கண்டனமாக வளருகிறது, உ. பி.-யில்!

'எங்களுக்கு இல்லாவிட்டால், எண்ணெய் ஊற்றையே தூர்த்துவிடுவோம்' என்கின்றனர், அசாமியர்!

'அகில இந்தியா'க்களுடைய சாவதானமான சிந்தனைக்கு, இந்த உண்மைகளை நாம் நம்பிக்கையோடு மீண்டும் மீண்டும் சிபாரிசு செய்கிறோம்.

உற்றார் வாழும் போபாலில் மின்சாரத் தொழிற்சாலை அமைவதை, உ. பி. மாநிலத்தவர் சகித்துக்கொள்ள மாட்டார்களாம்! ஆனால், அன்னியர் நாட்டில் அமைவதை அதே தொழிற்சாலையை, தமிழர் மட்டுமே இன்பம் பொங்கும் கண்களோடு கண்டு ரசிக்க வேண்டுமாம்! **இதுதான் 'அகில இந்திய'** அரசியல் அமைப்பில் தென்னாடு பெறக்கூடிய பலன்!

இதற்காகத்தான், தங்களுடைய, இன்னும் பத்தாண்டு எதிர்காலத்தையேனும் வடநாட்டு ஏகாதிபத்தியத்துடன் பிணைத்திருக்க நாம் சம்மதிக்க வேண்டும் என்கிறார் போலும், கனம் சுப்பிரமணியம்! வாழ்க, அவரது அடிமைப் புத்தி! வளர்க அவரது ஏகாதிபத்தியத் தொண்டுள்ளம்!

அங்குள்ள காங்கிரசாருக்கு இருக்கும் மாநிலப் பற்றும், இங்குள்ள காங்கிரசாருக்கும் 'அகில இந்தியா'க்களுக்கும் உள்ள தாசர்புத்தியும், தமிழக மக்களால் எவ்வளவு விரைவில் உணரப்படுகிறதோ, அதைப் பொறுத்தே அவர்களது விடுதலையும் வாழ்வும் இருக்கும்!

தமிழ்ப் பெருமக்களே! அங்கும் பாருங்கள் — இங்கும் பாருங்கள்!

'விற்பனை வரி என்ற பெயரே தவறு'

—ஏ.வி.பி. ஆசைத்தம்பி

'ஒருமுனை விற்பனை வரி வேண்டும்'

—எம். செல்வராஜ்

'சிறு வியாபாரிகள் பிச்சைக்காரர்களாகிவிடுகிறார்களே'

—எம். பி. சாரதி

'ஓட்டைப்பானையில் வேகாத நிலையிலுள்ள இட்டிலியை தின்பதேன்?'

—க. அன்பழகன்

சென்னை, ஜூலை 8—

இன்று சென்னை சட்டசபையில் போது விற்பனை வரி, மற்ற வரிகள், தீர்வைகள் நிர்வாகத்திற்காக ரூ. 1,36,91,700 மானியம் கோரி தொழில் அமைச்சர் ஆர். வெங்கட்ராமன் ஒரு பிரரேபணை கொண்டுவந்தார்; விவாதத்திற்குப் பிறகு இது அங்கீகரிக்கப்பட்டது.

இந்தப் பிரரேபணைமீது வெட்டுத் தீர்மானம் கொண்டுவந்து உறுப்பினர்கள் பலர் பேசினர். கழக உறுப்பினர்கள் பலர் பேசுகையில் ஒருமுனை விற்பனை வரியை அமுல் செய்ய வேண்டுமென்றும், உணவுத் தானியங்கள்மீது விற்பனை வரி போடுவதைக் கண்டித்தும், ரூ. 20,000-க்கு அதிகமான வருமானத்தின்மீதே வியாபாரிகளுக்கு விற்பனை வரி விதிக்கப்பட வேண்டுமென்றும் வற்புறுத்தினா.

தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"பொது விற்பனை வரி வசூலுக்காக மானியம் கோரிப் பேசுகையில் அமைச்சர் தன் திறமையைக் காட்டியுள்ளார். எதிர்க்கட்சியினர், விவாதத்தின்போது பல குறைபாடுகளை எடுத்துரைத்தனர். அவைகளை அமைச்சர் வெகு திறமையாக மறைத்தும், புறக்கணித்தும் பேசிவிட்டார்" என்று பேசிக்கொண்டிருக்கையில் ஒரு காங்கிரஸ் உறுப்பினர் ஒழுங்கு பிரச்சினையைக் கிளப்பி, 'உறுப்பினர், அமைச்சருக்குப் புத்தி சொல்லுகிறாரா அல்லது வெட்டுப் பிரரேபணை மீது பேசுகிறாரா?' என்று கேட்டதற்கு, சபாநாயகர், 'உறுப்பினர் சரியாகத்தான் பேசுகிறார்' என்று தீர்ப்பளித்து விவாதத்தைத் தொடருமாறு செய்தார்.

தொடர்ந்து பேசும்போது. தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி அவர்கள், 'விற்பனை வரி' என்ற பெயரே தவறானது என்று கூறினார்.

"வாங்குபவர்களிடம் இந்த வரி வசூலிக்கப்படுகிறது; இதற்கு விற்பனை வரி என்று கூறுவது எப்படிப் பொருந்தும்? இதற்கு மொத்த வருமான வரி (டர்ன்—ஓவர் டாக்ஸ்) என்று பெயரிட்டால் நன்றாகயிருக்கும்.

"இந்த விற்பனை வரி, நாட்டில் நெருக்கடி உள்ளபோதும், யுத்தம் போன்ற அபாயச் சூழ்நிலை நிலவும்போதும் போடப்பட வேண்டியதாகும்.

"இந்த வரியை முதல் முதலில் போட்ட ஆச்சாரியார், யுத்த காலத்தில்தான் போட்டார்; அதுவும், மதுவிலக்கு அமுலாக்கப்பட்ட நேரத்தில் இந்த வரியைப் போட்டார்; அது தவறாகாது. ஆனால், இந்தக் காலத்திலும் இது நீடிக்கப்படவேண்டும் என்று கருதுவது தவறாகும்.

"மேலும், இந்த வரி பொது மக்களைப் பாதிக்கிறது. இந்த வரியைப் பற்றி மூன்று முக்கிய விஷயங்களைக் கவனிக்கவேண்டும்; ஒன்று—வரியை அடியோடு நீக்குவதா என்பதை முடிவு செய்யவேண்டும்; இரண்டு-இதை ஒரு முனையில் வசூலிப்பதற்கான முறையை அமுலாக்குவது; மூன்று—உணவுப் பொருள்கள் மீது வரி வசூலிப்பதை கைவிடுவது; இதைப் பற்றி நாம் அரசாங்கத்திற்கு எடுத்துச் சொல்லலாம். மீதி அவர்களின் கடமை! நாம் பொது மக்களிடம், 'இதைச் சொன்னோம்' என்று மட்டும்தான் சொல்லமுடியும்.

"இந்த வரி பணக்காரர்களை மட்டும் பாதிப்பதானால் நாம் கவலைப்படமாட்டோம்; ஆனால் இது, சாதாரண ஏழை மக்களைப் பாதிக்கிறது; அதனால்தான் கண்டிக்கிறோம்.

"மதுவிலக்கினால் அரசாங்கத்திற்கு ரூ. 18 கோடி நஷ்டம் ஏற்படுகிறதே, அதை இந்த வரி ஈடு செய்கிறதா என்றால், இல்லை. இதைவிட வேறு வழிகளில் அந்த நஷ்டத்தை ஈடுசெய்யலாம். உதாரணமாக, இன்று நாட்டில் உள்ள சிற்றுண்டிச்சாலைகளைக் கணக்கெடுத்து, பிரிவுகளாகப் பிரித்து, ஆண்டுதோறும் அதை நடத்த விரும்புகிறவர்களுக்கு 'ஏலம்' விட்டுப் பணம் பெறலாம்; இதனால், உணவுப் பண்டங்களின் விலை கூடிவிடும் என்று சிலர் கருதலாம்; அப்படி ஒன்றும் நேராது. இன்று இரயில்வே நிலயங்களில் உள்ள உணவு விடுதிகளை நடத்த 'ஏலம்' விடப்படுகிறது; அதனால் அந்த விடுதிகளில் பண்டங்களின் விலை உயரவில்லை. இப்படிச் செய்யவேண்டியே எத்தனையோ உள்ளது.

"சினிமா, விளம்பரம் இவைகளின்மீது வரி விதிக்கப்பட வேண்டும் என்று ஒரு சில உறுப்பினர்கள் எதையோ மனதில் வைத்துக்கொண்டு, யாரையோ அழித்துவிடலாம் என்று யோசனை கூறுகின்றனர். அப்படி ஒன்றும் இன்று நாங்கள் வரி செலுத்தாமல் இல்லை.

"மேலும், சினிமாவை ஒழிப்பதால் ஆபாசம் ஒழிந்துவிடாது; கோயில்களில் உள்ள சிலைகளைப் பார்த்தால் புரியும்—அதில் ஆபாசம் இல்லையா?" என்று பேசிக்கொண்டிருக்கையில் அவருக்கான நேரம் தீர்ந்துவிடவே, அவைத் தலைவர், மேலும் உறுப்பினர் பேசுவதற்கு அனுமதிக்கவில்லை.

★

தோழர் எம். செல்வராஜ் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"இன்று இந்த வரி பல கட்டங்களில் வசூலிக்கப்படுகிறது; இதனால் எல்லோரும் பாதிக்கப்படுகின்றனர். வியாபாரிகள் கணக்கு வைப்பதற்குத் திண்டாடுகிறார்கள்; மக்கள் அதிக பணம் செலுத்துகின்றனர்.

"ஒரு முனை விற்பனை வரியை அமுலாக்குவதால் வருமானம் குறையும் என்று மேல் சபையில் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். அப்படி ஒன்றும் நேர்ந்துவிடாது. மேலும், உற்சாகத்துடன் வரி செலுத்த பலர் முன்வருவார்கள்.

"இன்று நாட்டில் உள்ள நிலை என்ன? விலைவாசிகள் உயர்ந்துள்ளன; வருமானம் குறைந்துள்ளது; எனவே, வரி செலுத்துவதில் ஏமாற்றுகின்றனர். வரி குறைந்தால் மக்கள் ஒத்துழைப்பு அதிகமாக இருக்கும்.

"மேலும், ரூ. 15,000 வருமானமுள்ள வியாபாரிகளுக்கு மட்டுமே வரி விதிக்கப்பட வேண்டும்.

"மணிலாப் பயிருக்கு விதிக்கப்படும் வரியை விற்பனை கட்டத்தில் விதிக்கப்படவேண்டும்.

"உணவுப் பண்டங்களின் மீதுள்ள வரியை ரத்துசெய்ய வேண்டும்."

★

தோழர் எம். பி. சாரதி பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"இந்த விற்பனை வரியின் மூலம் தலைக்கு 7 அணா அளவில் மக்கள் செலுத்துகின்றனர் என்று கூறுவது தவறு. இந்த வரியின் மூலம் ரூ. 12 கோடி வருமானம் கிடைக்கிறது. நாட்டில் வாழும் 3 கோடி மக்கள் இதைச் செலுத்துவதால், மொத்தம் தலைக்கு ரூ. 4 வீதமும, 10 பேர் உள்ள குடும்பத்தில் ரூ. 40 அளவிற்கும் வரி செலுத்த வேண்டியுள்ளது; இது மிகவும் அதிகமாகும்.

"மகாத்மா காந்தி உயிரோடிருந்த காலத்தில், 'அரிசன்' பத்திரிகையில் உப்பு சத்தியாக்கிரகத்தைப்பற்றி எழுதியதை சபையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

"உப்பு மீது விதிக்கப்படும வரியை எதிர்த்துக் காந்தியார் கிளர்ச்சி செய்தார்.

"எனவே, இந்த அரசாங்கம் உணவுப் பொருள்கள்மீது வரி போடுவது கூடாது.

"ஒரு முனை விற்பனை வரி விதிப்பினால் பல நன்மைகள் உண்டு; வியாபாரிகள் தப்பித்துக்கொள்ள முற்படமாட்டார்கள்; பணமும் நடுக்கொள்ளை போகாது.

"இன்று சாதாரணமாக ரூ. 100 முதல் வைத்து வியாபாரம் செய்யும் சிறுவியாபாரி, ஓராண்டு கழிந்த பின்னர், இலாகாவினர் தொடரும் நடவடிக்கையினால் ரூ. 300 வரை ஒரே சமயத்தில் வரி செலுத்த வேண்டும் என்ற நிலை இருப்பதால்—அந்த சிறுவியாபாரி வரி செலுத்த முடியாமலும், அவன் கடை ஏலத்திற்கு விடப்பட்டும், தான் பிச்சை எடுத்துப் பிழைக்கும் நிலைக்கும் ஆளாகிறான். எனவே, குறைந்தது ரூ. 20,000 வருமானம் உள்ள பெரிய வியாபாரிகள்மீது மட்டுமே வரி விதிக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்."

★

தோழர் க. அன்பழகன் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"இந்த விவாதத்தில் பொதுவாக விற்பனை வரி, முதலிய வரிகள் நிறைவேற்றும் முறையைப் பற்றி எல்லோரும் பேசினர். பல குறைபாடுகளை விவாதத்தில் எடுத்துரைத்தனர்.

(4-ம் பக்கம் பார்க்க)

தி. மு. கழகம்: தாயகத்தின் செல்வம்

கிராம மக்களின் மகத்தான எழுச்சி

என். வி. நடராசன் சுற்றுப்பயண நிகழ்ச்சி

சிறுகுடல்:

18—6—57 காலை 8 மணிக்கு பெரம்பலூர் வட்டம் சிறுகுடல் தி. மு. கழகச் சார்பில், மாரியம்மன்கோயில் திடலில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர் கி. செல்லப்பன் தலைமை வகித்தார்., சுற்றுப்புற சிற்றூர்களிலிருந்தும் சிறுகுடல் மக்கள் ஏராளமாக வந்திருந்தனர். துவக்கத்தில் தோழர்கள் எஸ். நெடுமாறன், அரு. ஆதிமூலம், மூங்கில்பாடி வடிவேல் ஆகியோர் பேசிய பின் துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் 'விவசாயத் தொழிலாளர்களும், காங்கிரஸ் ஆட்சியின் ஏமாற்றுதலும்', என்பதை விளக்கியும், வரிக் கொடுமையை எதிர்த்தும் பேசினர்.

பல கிளைகளின் சார்பில் கைத்தறி ஆடைகள், மலர்மாலைகள் அணிவிக்கப்பட்டன.

ஆனந்தவாடி:

உடையார்பாளையம் வட்டம் ஆனந்தவாடி தி. மு. கழகத் துவக்க விழா 18—6—57 மாலை 6-30 மணிக்கு சிறப்புற நடந்தேறியது. மாலை 5 மணிக்கு பஞ்சாயத்து போர்டு தலைவரும், ஊரிலுள்ள முக்கிஸ்தர்களும், நூற்றுக்கணக்கான விவசாயப் பெருங்குடி மக்களும் திரண்டிருந்து மேளவாத்தியங்களுடன் துணைப் பொதுச்செயலாளரையும் மற்ற தோழர்களையும் ஊர்வலமாக அழைத்துச்சென்றனர். பொதுக்கூட்டம் கே. வி. கே. சாமி அரங்கில் நடைபெற்றது. வசிட்டபுரம் நாராயணன் தலைமை வகித்தார். தோழர்கள் சிவபெருமாள், வடிவேல், கோவிந்தராசன் ஆகியோர் கழகக் கொள்கையை விவரித்துப் பேசினர்.

பின்னர் என். வி. நடராசன் அவர்கள் கழகத்தைத் துவக்கிவைத்து கடந்த ஒன்பது ஆண்டுகளாகக் கழகம் ஆற்றிவரும் பணியினையும், காங்கிரஸ் ஆட்சியின் கொடுமைகளை விவரித்துப் பேசியதுடன், திராவிடம் தனி உரிமை பெற்றால்தான் ஏழை—நடுத்தர மக்கள் நல்வாழ்வு அடையமுடியும் என்பதையும் விளக்கினர்.

உள்ளூர் கிளை, சுற்றுப்புறங்களிலுள்ள கிளைகளின் சார்பிலும் துணைப்பொதுச் செயலாளருக்கு கைத்தறிதுண்டுகளும், மலர் மாலைகளும் வழங்கப்பட்டன. அரியலூர் கலைமன்றத்தினரால் இசைவிருந்தும் நடைபெற்றது.

அலவாய்ப்பட்டி:

சேலம் இராசிபுரம் வட்டம் ஆலவாய்ப்பட்டியில் 25—6—57 காலை 11 மணிக்கு தி. மு. கழகத் துவக்கவிழா பாவடியில் இனிது நடந்தேறியது. ஊர் எல்லையிலிருந்து மேளவாத்தியங்களுடன் பிரமுகர்களும், நெசவுத் தொழிலாளர்களும் கழகத் துணைப் பொதுச்செயலாளரை ஊர்வலமாக அழைத்துச் சென்றனர். வழியில் கழகக் கொடியை ஏற்றிவைத்தார். துவக்கவிழாக் கூட்டத்திற்கு சேலம் மாவட்ட தி.மு. கழக உறுப்பினர் பி. எம். சுப்பிரமணியம் தலைமை வகித்தார். தோழர் என். வி. நடராசன் அவர்கள் கழக அலுவலகத்தைத் திறந்துவைத்துப் பேசுகையில், தி. மு. கழகம் நெசவாளர்களுக்கு ஆற்றிவரும் சேவையையும், காங்கிரஸ் ஆட்சியினர் செய்துவரும் துரோகத்தையும் விளக்கியதோடு இதனால் நம் தாயகம் தனிஉரிமை பெறவேண்டிய அவசியத்தையும் எடுத்துக் கூறினர்.

இக்கூட்டத்தில் நெசவுத் தொழிலில் ஈடுபட்டுள்ள ஏராளமான தாய்மார்களும் வந்திருந்தனர். மலர் மாலைகளும் கைத்தறி துண்டுகளும் அணிவிக்கப்பட்டன.

நாச்சிப்பட்டி:

25—6—57 பிற்பகல்4மணிக்கு வெண்ணந்தூர் அடுத்த நாச்சிப்பட்டியில் தி. மு. கழகத் துவக்க விழா நடந்தேறியது. விவசாயத் தொழிலாளர்களும், பொதுமக்களும் திரண்டிருந்தனர். தோழர் சிற்றுளி சுப்பிரமணியம் தலைமை வகித்து கழகக் கொள்கையை விவரித்தார்.

அடுத்து துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் கழகத்தைத் துவக்கிவைத்துப் பேசியதுடன், கொடியையும் உயர்த்தி வைத்தார்.

வெண்ணந்தூர்:

25—6—57 இரவு 7-மணிக்கு இராசிபுரம் அடுத்த வெண்ணந்தூரில் தி. மு. கழகச் சார்பில், பெரிய பாவடியில் மாபெரும் கூட்டம் நடைபெற்றது. நெசவாளர்கள், விவசாயத் தொழிலாளர்கள் உள்பட ஏராளமான மக்கள் கூடியிருந்தனர். தோழர் பி. எம். சுப்பிரமணியம் அவர்கள் தலைமை வகித்தார். தோழர் சிற்றுளி சுப்பிரமணியம் பேசுகையில் கழகக் கொள்கைகளையும், அண்மையில் நடைபெற்ற தேர்தலில் காங்கிரஸ் ஆட்சியினர் செய்த அட்டூழியத்தையும் விளக்கினர்.

அடுத்து, தோழர் என். வி. நடராசன் நீண்டநேர சொற்பொழிவாற்றுகையில் தற்கால அரசியல் நிலையையும் காங்கிரஸ் ஆட்சியினரின் முன்னுக்குப்பின் முரண்பட்ட சொல்—செயல் ஆகியவைகளையும், வரிக் கொடுமைகளை விவரித்தும், வெள்ளையர் ஆட்சியைவிட கொடுமைமிக்க ஆட்சி காங்கிரஸ் ஆட்சி என்பதை ஆதாரங்களுடனும் எடுத்துக் காட்டினர். வெண்ணந்தூர் ஆட்டையாம்பட்டி, குமாரபாளையம் ஆகிய கிளைகளின் சார்பிலும், கழக முக்கியஸ்தர் சிவஞானமும் கைத்தறி ஆடைகளை அணிவித்தனர். தோழர் முத்து நன்றிகூற கூட்டம் முடிவுற்றது.

வெள்ளாவிப்புதூர்:

கோவை மாவட்டம் மூலனூர் அடுத்த வெள்ளாவிப்புதூர் தி. மு. கழகச் சார்பில் 26—6—57 மாலை 6 மணிக்கு ஆரம்பப் பள்ளி எதிர் திடலில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தாரை வட்ட தி. மு. கழகச் செயலாளர் கன்னிவாடி பெரியார் தலைமை வகித்து டெல்லி சர்க்கார் விதித்துள்ள வரிக் கொடுமைகளைக் கண்டித்துப் பேசினர்.

அடுத்து தோழர் கே. எஸ். கண்ணுசாமி கழகக் கொடியை ஏற்றிவைத்தார். தொடர்ந்து தோழர்கள் மூலனூர் கந்தசாமி, சின்னத்தாரை-இராமசாமி ஆகியோர் கழகக் கொள்கைகளை விவரித்துப் பேசினர்.

இறுதியாக தோழர் என். வி. நடராசன் அவர்கள், அரசியல்—பொருளாதார-சமுதாயத் துறைகளில நம் தாயகம் டெல்லி ஆட்சியினரால் எவ்வாறு வஞ்சிக்கப்பட்டு வருகிறதென்பதை விளக்கியும், இவைகளிலிருந்து நம் நாடு விடுபட தனி அரசு உரிமை வேண்டியதின் அவசியத்தை விவரித்தும் சொற்பொழிவாற்றினர்.

பல கிளைகளின் சார்பிலும் மூலனூர் பஞ்சாயத்து போர்டு சார்பிலும் மலர் மாலைகள், கைத்தறி ஆடைகள் அணிவிக்கப்பட்டன.

உள்ளூரிலிருந்தும் சுற்றுப்புற கிராமங்களிலிருந்தும் விவசாயத் தொழிலாளர்கள், நெசவாளர்கள் பொதுமக்கள் ஏராளமாக வந்திருந்தனர்.

மேட்டுவலசு:

தாராபுரம் அடுத்த மேட்டுவலசு தி. மு. கழகத் துவக்க விழா 27—6—57 மாலை 6-30 மணிக்கு, சிறப்புநடந்தேறியது. தோழர் கே. எஸ், நடராசன் தலைமை வகித்தார்.

துவக்கத்தில் கன்னிவாடி கே. எஸ். எஸ். பெரியார் கழகத்தைத் துவக்கிவைத்துப் பேசினர்.

அடுத்து தோழர்கள் தாரை தம்பி, மூலனூர் கந்தசாமி, மீனாட்சிபுரம் சர்க்கரை, கணியூர் கே. ஏ. கிருஷ்ணசாமி ஆகியோர் கழகக் கொள்கைகளை விவரித்துப் பேசினர். இறுதியாக தோழர் என். வி. நடராசன் அவர்கள், காங்கிரஸ் ஆட்சியில் ஏழை நடுத்தர மக்கள் படும் கொடுமைகள் வரி உயர்வுகள் ஆகியவைகளைக் கண்டித்துப் பேசியதுடன் நம் தாயகம் தனி உரிமை பெற வேண்டியதின் அவசியத்தையும் விளக்கினர்.

பல கிளைகளின் சார்பில் கைத்தறி துண்டுகளும், மலர்மாலைகளும் அணிவிக்கப்பட்டன.

அன்பளிப்புகள்

21—6—57-ல், சாத்தூர் கழகத் தோழர் எம். முருகையாவின் துணைவியார் தோழியர் முத்துலட்சுமி, ஓர் பெண் மகவுக்குத் தாயானர்; இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப்பாகத் தரப்பட்டது.

* * *

21—6—57-ல், லால்குடி வட்டம்—நகர்கிராமம் தோழர் ரெத்தினம்—தோழியர் காசியம்மாள் வாழ்க்கை ஒப்பந்த விழா, தோழர் பிசகை அவர்கள் தலைமையில் நடைபெற்றபோது, தோழர்கள் பலர் வாழ்த்துரை வழங்கினர். இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப்பாகத் தரப்பட்டது.

சென்னை 35-வது வட்ட தி.மு.கழக நான்காம் ஆண்டுவிழா

அண்ணா, கண்ணதாசன் ஆகியோர் கலந்துகொண்டனர்

சென்னை, ஜூலை 8—

6—7—57 மாலை 6-30 மணி அளவில், சென்னை—கோடம்பாக்கம், 35-வது வட்ட தி. மு கழகக் கிளையின் நான்காம் ஆண்டு விழா, சிங்காரவேலு கிராமணி திடலில், தோழர் தாணி முன்மொழிய தோழர் கிருட்டிண மூர்த்தி வழிமொழிய மேற்படி கிளையின் செயலாளர் சா. நெடுமாறன் அவர்கள் தலைமையில் மிகப் பொலிவுடன் நடைபெற்றது.

இவ்வாண்டு விழாவில் அண்ணு அவர்களும், தோழர்கள் கண்ணதாசன், அறிவுடைநம்பி, ஏ. எஸ். ஜேசுபாதம், மா. செங்குட்டுவன் ஆகியோரும் உரை நிகழ்த்தினர்.

தலைவர் தனது தலைமையுரையில் கழகம் ஆற்றியுள்ள பணிகளை விளக்கி கழகத்திற்கு மேலும் ஆதரவு தருமாறு மக்களை கேட்டுக்கொண்டார்.

அடுத்து, தோழர் மா. செங்குட்டுவன் அவர்கள், இந்தியப் பேரரசு தென்னகத்தைப் புறக்கணிப்பதையும், அவர்கள் தென்னக மக்களுக்கிழைக்கும் கொடுமைகளையும் விளக்கிப் பேசினர்.

பின்னர் பேசிய தோழர் ஏ. எஸ். ஜேசுபாதம் அவர்கள், சைதாப்பேட்டைத் தொகுதியில் கல்வி பயிலும் மாணவர்கள். தாங்கள் கல்லூரியில்—உயர்நிலைப் பள்ளிகளில் சேர,தொகுதி சட்டமன்ற உறுப்பினரிடம் நற்சான்று பெறச் சென்றால், மாணவர்களில் சிலர் தேர்தல் காலத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்திற்குப் பணியாற்றினர்கள் என்ற காரணத்தால், அவர்களிடம் அவ்வுறுப்பினர் 'நீங்கள் யாருக்கு பாடுபட்டீர்களோ அவர்களிடமே பெற்றுக்கொள்ளுங்கள்,' என்று திருப்பி அனுப்புகிருரென்றும், அது முறையற்ற செய்கையென்றும் அறுவுறித்தினர்.

மேலும் அவர், தேர்தலுக்கு பிறகு கழகம் பெற்ற வளர்ச்சியையும்—அத்தொகுதியில் பல மன்றங்கள் தவக்கியிருப்பதையும் விளக்கி சிறிது நேரம் சொற்பொழிவாற்றினர்.

பின்னர் பேசிய புலவர் அறிவுடைநம்பி அவர்கள், தி. மு. கழகத்தை மாற்றார் வசை பாடுவதையும், ஆனால் கழகம் அவைகளையெல்லாம் தாங்கி, 'வளரும் செடிக்கு உரமாக' மாற்றாரின் வசையைத் தாங்கி வளர்ந்து வருகிறதென்றும், காமராசர் பதவிக்குவந்து 10-ஆண்டுகளாகியும் நாட்டில் வறுமை தாண்டவமாடுவதை எடுத்துக் காட்டியும், சென்னை அரசியலார் தமிழகத்திற்கு 'தமிழ் நாடு' எனப் பெயர் வைக்காததைக் கண்டித்தும், வள்ளுவர் கூறிய 'செய்தக்க வல்ல செயக்கெடும்—செய்தக்க செய்யாமையானும் கெடும்' என்ற குறளை எடுத்துக் காட்டி அறிவுறுத்தினர்.

அடுத்துப் பேசிய தோழர் கண்ணதாசன் அவர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு யாருக்கும் இல்லாத எதிர்ப்பு ஏற்பட்டிருக்கும் நிலையையும், அவ்வாறு 'எட்டுத் திசையிலிருந்து' வரும் எதிர்ப்பையும் தாங்கி வளரும் கழகக் கொள்கையின் சிறப்பை எடுத்துக் காட்டியும், தி. மு. கழகத் தோழர்கள் 15 பேர் சட்டமன்றம் சென்ற பிறகு சட்டமன்றத்தில் நல்ல தமிழில் நிகழ்ச்சிகள் நடைபெறுவதையும் சட்டமன்றத்தில் நிதியமைச்சர் சுப்பிரமணியம் தி. மு. கழகம் நாட்டுப் பிரிவினையை ஒதுக்கி வைத்துவிட்டு, தம்மோடு ஒத்துழைக்கக் கோரியதையும், அதற்கு நாட்டு மக்கள் கழகக் கருத்தை எதிர்பார்ப்பதையும், சட்டமன்ற கட்சித் தலைவர் அண்ணா அவர்களின் விளக்கம் வேண்டுமென்றும், கேட்டுக்கொண்டு தனது உரையை முடித்துக்கொண்டார்.

இறுதியாகப் பேசிய அண்ணா அவர்கள், நிதியமைச்சர் சட்டமன்றத்தில் விடுத்த அழைப்புக்குப் பதிலளித்தும், தி. மு. கழக சட்டமன்ற உறுப்பினர்களும், வரவு-செலவு விவாதத்தில் எடுத்துச் சொல்லிய கருத்துக்களுக்கு நிதியமைச்சர் கூறிய பொருந்தாப் பதிலையும் விளக்கி ஓர் சிறப்பான உரை நிகழ்த்தினர்.

தலைவர் முடிவுரைக்குப் பின் தோழர் தாணி நன்றிகூற கூட்டம் இனிது முடிவுற்றது.

கூட்டத்தில் அண்ணா அவர்களுக்கு பல கிளைகளின் சார்பிலும் மன்றங்களின் சார்பிலும் மலர் மாலைகளும் கைத்தறி ஆடைகளும் அணிவிக்கப்பட்டன.

அண்ணா அவர்கள் ஏ. வி. எம். படப்பிடிப்பு நிலையத் தொழிலாளர் தோழர் ரங்கநாதன் அவர்களது பெண்மகவுக்கு 'செல்வி' எனப் பெயரிட்டார்கள். (இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப்பாகத் தரப்பட்டது).

கூட்ட செலவுகளுக்கு அம்பேத்கார் நினைவு மன்றம் ரூ. 10-ம், 'வாஹினி' படப்பிடிப்பு நிலையத் தொழிலாளர்கள் ரூ. 21-6-0-வும் அளித்ததற்கு நன்றி தெரிவிக்கப்பட்டது. (ந. கி.)

'மாநிலங்கள் தனித்து வாழ விரும்பும் காலம் நெருங்குகிறது'

டில்லி ஏகாதிபத்தியத்திற்கு சி. ஆர். எச்சரிக்கை

சென்னை, ஜூலை 8—

"மானியம் பெறும் நகர சபைகளின் நிலைக்கு மாநில அரசுகளின் நிலை வேகமாக மாறிக் கொண்டு வருகிறது.

"மத்திய அரசாங்கத்தின் அதிகாரம் வலிவு பெற வேண்டும் என்பவர்கள் இதை வரவேற்கலாம்; ஆனால் அத்தகைய அமைப்பு மணல்மீது கட்டிய வீடாகும் "

என்று சி. இராசகோபாலாச்சாரியார் அவர்கள் இந்தக் கிழமை வெளியாகியுள்ள 'சுயராஜ்யா' என்ற ஆங்கில இதழில் டில்லி ஏகாதிபத்தியம் பற்றி எழுதியுள்ள ஒரு கட்டுரையில் குறிப்பிட்டிருக்கிறார். அக்கட்டுரையில் மேலும் அவர் எழுதியிருப்பதாவது :—

"மத்திய அரசைப் பலப்படுத்தும் நோக்கத்தில் மாநிலங்களைப் பலவீனப் படுத்தக் கூடாது.

"பண்டைய இந்தியாவில் பல்வேறு சாம்ராஜ்யங்களைச் சேர்ந்த பரம்பரையினர், ஒன்று பட்டு வாழ விரும்பவில்லை; அவர்கள், பிறரை அடிமைப் படுத்தி வாழவே எண்ணினர். இதனால் பிளவு சக்திகள் பெருகின.

"பரம்பரை மன்னர் ஆட்சிக்குப் பிறகு, மக்களாட்சி ஏற்பட்டுள்ள இந்த சனநாயகக் காலத்தில்கூட மத்திய அரசின் நிர்வாகத்தைப் பலப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

"மாநிலங்களின் அதிகாரங்கள் படிப்படியாக முக்கியத்துவமில்லாமல் செய்யப்பட்டு வருகிறது. முதலீடு செலவிற்காக மத்திய அரசாங்கம் மட்டுமே கடன் எழுப்பலாம் என்று முடிவு செய்திருப்பதும், வரிவிதிப்பு அதிகாரங்களைக் கொஞ்சம் கொஞ்சமாகக் கைப்பற்றுவதும் மத்திய அரசை வலுக்கச் செய்வதாகும்.

"இதனால், அரசியல் சக்திகளுக்கிடையே கடும் சுழல் ஏற்படும் காலம் கூடிய சீக்கிரம் வரும். அப்போது, தனித்து வாழ விரும்பும் மாநிலங்களைப் பிடித்திழுக்கக் கூடிய ஒரு தலைவர் கூட, மத்திய ஆட்சியில் இல்லை என்பது புலப்படும் "

'வேலை நிறுத்தம் செய்ய வேண்டும்'

அஞ்சல், தொலைவழி ஊழியர் சிபாரிசு

புதுடில்லி, ஜூலை 8—

ஆகஸ்டு திங்களில் வேலை நிறுத்தம் செய்ய முடிவு செய்துள்ளதாக அரசாங்கத்திற்கு அறிவிக்குமாறு அஞ்சல், தொலைவழி ஊழியர் இணைப்பு நிறுவனத்தைச் சேர்ந்த கிளைகள் சிபாரிசு செய்துள்ளன.

நிதி அமைச்சருக்கு அண்ணா பதில்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

டாக இருக்க, எட்டும் நான்கும் பதினைந்து என்கிறார் சுப்பிரமணியம். நான் உடனே குறுக்கிட்டு எழுந்து, 'ஐயா! எட்டும் நான்கும் பதினைந்து அல்லவே; பன்னிரண்டுதானே!' என்று சொன்னால், 'இப்பொழுது குறுக்கிடாதே; பின்னாலே பேசலாம்' என்கிறார்.

"அதைப் போல, நாங்கள் சொல்லாத ஒன்றை எடுத்து வைத்துக்கொண்டு, 'எட்டும் நான்கும் பதினைந்து என்று அண்ணாதுரை சொன்னார்' என்று வைத்துக்கொண்டு 'அந்த பதினைந்தையும்—இதோ இந்த ஐந்தையும் வைத்துக் கூட்டுங்கள்; இருபதுஆகிறதா இல்லையா?' என்று கேட்கிறார். காங்கிரஸ் அங்கத்தினர்கள் விரல் விடுகிறார்கள்—15—16—17—18—19—20; ஆகா! நம்முடைய நிதியமைச்சர் எவ்வளவு பெரிய சாமர்த்தியசாலி! பதினைந்தும் ஐந்தும் இருபதுதானே! இவர்களுக்கு இது கூட தெரியவில்லையே,'— என்று எங்களைப் பார்த்துக் கேட்கின்றார்கள். அந்த வகையிலே வக்கிலாக காட்சியளிக்கின்றார்.

"மூன்றாவது பதிலில் ஒரு வியாபாரியானார்; அந்த வியாபாரியான நோக்கிலேதான் இது சொன்னது—'ஒரு 10 வருடத்திற்கு நமக்குள்ளே தகராறு வேண்டாம்; அதற்குள்ளே என்னுடைய காரியத்தை நான் முடித்துக்கொள்கிறேன்,'-என்று வியாபாரி வாதத்திலே சொன்னார்.

"அவர் எந்த ரூபமெடுத்தாலும் சரி, திராவிட முன்னேற்றக் கழகம் ஒரே ஒரு ரூபத்திலேதான் நாட்டுமக்களிடத்திலே காட்சியளிக்கின்றது. இந்த நாட்டுமக்களின் அறியாமையை, இந்த நாட்டு மக்களுடைய ஏழ்மையை, இந்த நாட்டு மக்களுடைய அடிமைத்தனத்தை —இவைகள் நீக்கப்பட வேண்டுமென்றால், வடநாட்டு ஏகாதிபத்திய பிடிப்பிலேயிருந்து விடுபட்டாலொழிய, நமக்கு மார்க்கமில்லை — நமக்கு விமோசனமில்லை — பரிகாரமில்லை என்பதை நாங்கள் ஆழ்ந்து சிந்தித்து—ஆதாரங்களைத் தேடிப் பார்த்து — புள்ளி விவரங்களை அலசிப் பார்த்து — பூகோளத்தையும் சரித்திரத்தையும் படித்துப் பார்த்து—உலக வரலாறுகளையெல்லாம் அலசிப் பார்த்து, அதற்கு பிறகு இந்த முடிவுக்கு வந்தோமே தவிர, ஏதோ சபலத்தினாலே இந்த முடிவுக்கு வரவில்லை என்பதை நிதியமைச்சர் சுப்பிரமணியம் அவர்களுக்கு எடுத்துச் சொல்லி, எங்களை 10 ஆண்டுகளல்ல—15 ஆண்டுகளல்ல, 25 ஆண்டுகள் வேண்டுமென்றாலும் சண்டை போடாமல் இருக்கச் சொல்லுங்கள்; ஆனால் நியாயத்தை மட்டும் கேட்காமல் இருக்கச் சொல்லாதீர்கள்!

'பெண்ணே! ஒரு 10 நிமிடத்திற்கு கண்ணை மூடிக்கொள்,' என்று ஒரு காமுகன் சொன்னால், பெண், கண்ணை மூடிக் கொள்ளமாட்டாள். அதைப் போல நாட்டு விடுதலையிலே நாட்டம் கொண்டிருக்கும் ஒரு இயக்கத்தின் காரியங்களைப் பார்த்து, 'திராவிட நாடு கேட்பதை 10 வருடத்திற்கு நிறுத்திக்கொள்ளுங்கள்' என்று சொல்வதும், காமாந்தகாரன் கன்னிகையை அணுகி, 'நான் செய்கின்ற காரியத்தை நீ பார்த்தால்தானே அருவெறுப்பாக இருக்கும்; ஒரு 10 நிமிடம் கண்ணை மூடிக்கொள்' என்று சொல்வதும் அதிகமான வித்தியாசம் இருப்பதாக நான் கருதவில்லை.

"ஏனென்றால், நாங்கள் சட்டமன்றத்திற்குச் செல்ல முடியுமா என்ற எண்ணமே தோன்றாத நாள் முதற்கொண்டு இந்த காரியத்திலே ஈடுபட்டது எதற்காக என்றால் நாட்டு விடுதலைக்காகவும்—நம்முடைய அரசை நாமே அமைக்க வேண்டுமென்பதற்காகவும்தானே தவிர, வேறு எந்த காரியத்திற்காகவும் அல்ல! அதிலேயிருந்து இம்மியளவும் திராவிட முன்னேற்றக் கழகம் நழுவாது; ஒரு துளியும் எங்களை வேறு பக்கத்திலே திருப்பிவிட முடியாது; அல்லது போர் முழக்கத்தை ஒரு பக்கத்திலே எழுப்பி, அதன் மூலமாக மிரட்டி ஒரு பக்கத்திலே அழைக்க முடியாது.

"காற்று பலமாக அடிக்கிற பொழுதுதான் விளக்கு அணையாமல் இருப்பதற்காக சன்னல் கதவை மூடுவார்கள். நிதி அமைச்சர் சுப்பிரமணியம் சொல்லுகிறார்—'இந்தக் காற்று அடிக்கிற பொழுது சன்னலை மூடாதே! காற்று நின்றதும் வேண்டுமானால் சன்னலை மூடிக்கொள்'—என்று! இதைத் தவிர, 'இந்த 10-வருடகாலம் சும்மாயிரு' என்று அவர் சொன்னதற்கு ஒரு பொருளும் எனக்கு விளங்கவில்லை.

"நேரு பண்டிதரிடத்திலே நல்ல நம்பிக்கையும்—மதிப்பும் இருக்கின்ற காரணத்தினாலே தான், அவர் காலத்திலேயே இந்த காரியம் வெற்றிபெற வேண்டுமென்று விரும்புகிறேன். அவர் இதுவரை இந்தக் காரியத்திலே கவனம் செலுத்தாமல் இருந்திருக்கின்றார்; இனி கவனம் செலுத்துவார். கவனத்தை செலுத்தத்தக்க அளவில் — கவனத்தை ஈர்க்கத்தக்க வகையில், நாங்கள் 15-பேரும் சட்டமன்றத்திலே நம்முடைய உரிமை முழக்கத்தை அவ்வப்போது எடுத்து முழக்குவோம்.

"இந்த சூட்சமத்தை தெரிந்த காரணத்தினால் தான் நிதி அமைச்சர் சுப்பிரமணியம் மற்றொரு புத்திமதி சொன்னார்—'அண்ணாதுரை — அண்ணாதுரை! நீ, மேடையிலே பேசியதைப்போல இங்கே பேசாதே! இங்கே வேறு மாதிரியாகப்பேசு!' என்று சொன்னார்; நான் ஏமாறத் தயாராயில்லை.

"எங்களுக்கு (மேடைப்பேச்சு) அதுவும் தெரியும்; இது (சட்டமன்றப் பேச்சு) தெரிந்த எங்களுக்கு அது எளிது என்பது நிதி அமைச்சர் சுப்பிரமணியத்திற்கும் புரியும். ஆனால் அவர்—'இப்படிப் பேசாதே—வேறு மாதிரியாகப் பேசு' என்று சொன்னதற்குக் காரணம், உங்களுக்குத் தெரிய வேண்டுமானால், சிறு கதை சொன்னால் விளங்கும் என்று கருதுகிறேன்.

"ஒரு வித்துவான், 'நான் பாடினால் கல்லும் கரையும்' என்றார்; அதைப் போலவே, ஒருகல் விக்கிரகத்தின் முன்னால் நின்று பாடினார். அந்த விக்கிரகத்தின் கண்ணிலிருந்து கண்ணீர் வந்தது. இதைப் பார்த்த இன்னொரு வித்தவான், 'உன்னைப் போல விக்கிரகத்தின் கண்ணிலேயிருந்து கண்ணீர் வரும்படி எனக்குப் பாடத் தெரியாது; ஆனால் அதைவிட, உன் கண்களிலேயிருந்து கண்ணீர் வரும்படி பாடுவேன்' என்று சொன்னார். அதைப் போலவே அவர் பாடிய பொழுது பாட்டினுடைய உருக்கத்தின் காரணமாக கல்லிலே இருந்து கண்ணீர் வரவைத்த அந்த வித்வானே கதற ஆரம்பித்தாராம்!

"அதைப் போல, மேடைப் பேச்சை சட்ட சபையிலே பேசுவதற்குக் காரணம், 'உங்களையும் எங்கள் பக்கத்திலே இழுப்பதற்குத்தான்'—என்பதை நிதியமைச்சர் சுப்பிரமணியம் தெரிந்து கொள்ள வேண்டும்.

"சட்ட மன்றத்தில் எங்களுடைய மனக் குமுறலை உங்கள் முன்னாலே எடுத்து வைக்கிறோம்; மக்கள் படுகின்ற கஷ்ட நஷ்டங்களை சித்தரித்துக் காட்டுகின்றோம். வெடித்துக் கிடக்கின்ற — காய்ந்து கிடக்கின்ற வயலையும், எண்ணெய் காணாத தலையையும், குழிவிழுந்த கன்னங்களை புள்ளி விவரங்களாலே மட்டும் காட்டிவிட முடியாது.

"புள்ளி விவரங்களில் பேசினால் அது நிதியமைச்சர்களுக்கு மட்டுமே வேண்டுமானால் புரியுமே தவிர, சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு அவ்வளவு சீக்கிரத்திலே தெரியாது; நாட்டின் நிலையை எடுத்துச் சொல்லப் புள்ளி விவரங்கள் தெரியாததால் அல்ல-புள்ளி விவரத்தில் பேசினால் அது உங்கள் இதயத்தைத் தொடாது"

★★★★★★★★★★★★★★★★★

சேலம், மதுரை வழக்கு நிதி

சிறப்புக் கூட்டம்

★

மதுரை பழனி டாக்கீசில்
14—7—57 காலை 9 மணிக்கு

தலைவர்:
பி. போதகுருசாமி

பேசுவோர்:
இரா. நெடுஞ்செழியன்
—'கவிஞரின் உள்ளம்'
கி. மனோகரன்
—'ஜனநாயகம்'

நன்கொடை: ரூ. 1, அணா 8.

—மதுரை நகர் தி. மு. கழகம்

★★★★★★★★★★★★★★★★★

இதிலும் சென்னைக்குத் தோல்விதானா?

தென் உணவு மண்டலத்தில் கேரளத்திற்கு இடமளிக்க வேண்டும் என்று டில்லி முடிவு செய்துள்ளதாகத் தெரியவருகிறது.

இந்த முடிவை சென்னை, ஆந்திரம், மைசூர் ஏற்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

சென்னைக்குத் தேவைப்படும் அரிசியை மத்திய அரசு அளித்து விட்டால் தென் மண்டலக் குழுவிலிருந்து சென்னை விலகிக் கொண்டு, கேரளத்திற்கு இடம் தருவதாக மத்திய அரசாங்கத்திடம் நமது மாநில அரசாங்கம் வற்புறுத்தியது பற்றி தகவல் எதும் இல்லை!

அலுமினியத்தின் கதை கேளீர்!

புதுடில்லி, ஜுலை 9—

இந்தியாவில் அலுமினியம் உற்பத்தி 1955-ம் ஆண்டில் மொத்தம் 7,225 டன்னும் 1956-ம் ஆண்டின் முதல் ஆறு மாத காலத்தில் 3,449 டன்னுமாக இருந்ததாம்.

1958-ம் ஆண்டு இறுதிக்குள் அலுமினியத்தின் உபயோகம், ஆண்டிற்கு 35,000 டன்னாக அதிகரித்து விடுமென்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.

அலுமினிய உற்பத்தி 1961-ம் ஆண்டில் 40,000 டன் அளவை எட்டுவதற்கு திட்டக்குழு வழி கோலியிருக்கிறதாம்.

இத்தனை ஆண்டுகளாக பாத்திரங்களைத் தயாரிப்பதற்காக மட்டிலுமே அலுமினியம் உபயோகிக்கப்பட்டு வந்தது; இப்பொழுது, குண்டூசியிலிருந்து விமானங்கள் வரை பலவகைப்பட்ட பொருள்களின் தயாரிப்பில், அலுமினியத்தை உபயோகிக்க வழிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

தொழில் துறைகளில் இப்பொழுது அலுமினியம் அதிக அளவில் பயன்படுத்தப்பட்டு வருவதால், நாட்டில் அதன் உபயோகம் பெருமளவுக்கு அதிகரித்து விடும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.

அன்பழகன் கோரிக்கை

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

"என்னை பொறுத்தவரையில் இந்த விற்பனை வரி தவறான அடிப்படையில் விதிக்கப்பட்டதென்றே கருதுகிறேன். எந்தெந்தத் துறைகளில் மக்களிடமிருந்து அரசாங்கம் வரி போட்டு வசூலிக்கமுடியுமோ, அந்தத் துறைகள் அனைத்தையும் கையாளவேண்டும் என்று கருதுவது தவறாகும்.

"வரி விதிப்பின் அடிப்படையே தவறானது என்பதையே இந்த வரி சுட்டிக்காட்டுகிறது.

"வரி போடுவதற்குமுன், யார் மீது வரி போடுவது—எப்படி போடுவது—எவ்வளவு போடுவது—இந்த வரி யாரைப் பாதிக்கும் என்ற அடிப்படையில் ஆராய்ந்து, வரி போடவேண்டும். யார் சுலபமாக வரி தருவார்களோ அவர்கள் மீது வரி போட்டு, வரியைச் சுலபமாக வசூல் செய்துகொள்ள வேண்டும். இதை விடுத்து, எல்லோரிடமும் வரி வசூலிப்பது தவறாகும்.

"இந்த விற்பனை வரி சிக்கலான முறையில் நிறைவேற்றப்பட்டுள்ளது. விலக்களிப்பதில் தெளிவான முறை காணப்படவில்லை. அதிகாரிகள் தவறான வழியில் தங்கள் அதிகாரத்தைச் செலுத்தி, பல தவறுகளை இந்த வரி இழைத்துள்ளது. மொத்தத்தில் இந்த வரியை சரிவர வசூலிக்கும் திறமை அரசாங்கத்திற்கு இல்லை. ஏதோ ஒட்டைப் பானையில் வேகாத நிலையில் உள்ள இட்லியை தின்பதுபோல, ஏதோ ரூ. 11 கோடி வருமானம் கிடைக்கிறது என்று கூறுவதில் பயன் இல்லை.

"இந்த விற்பனை வரி நகரத்தில் வாழ்பவர்களைதான் அதிகம் பாதிக்கிறது; கிராமங்களில் உள்ளவர்களைப் பாதிப்பதில்லை என்று கூறுவது தவறாகும். கிராமத்தில் உள்ளவர்கள்கூட நகரத்திற்கு வந்துதான் தேவையான சாமான்களை வாங்கிச் சென்று, கிராமங்களில் சிறு அளவில் விற்று இலாபத்தைக் கொண்டு வாழ்கிறார்கள் என்பதை மறந்துவிடக்கூடாது.

"எனவே, இந்த வரி எல்லோரையும் பாதிக்கிறது ஏழையைப் பாதிக்கிறது; மக்களுக்கு தீமை செய்கிறது.

"இந்த வரிகளின் காரணமாக தொல்லைகள் அதிகமாகிறது; சிக்கல்கள் வளருகின்றன; மேலும், இந்த வரி, பெருமையை வளர்ப்பதாகவும் இல்லை.

"இத்தனைகளும் அடிப்படைக் காரணத்தைக் கண்டறிய நாம் முற்படும்போது ஏதாவது ஒரு கட்டத்தில் வரியை வசூலிக்காமல் பல முனையில் வரி வசூலிப்பதே முக்கிய காரணமாகும் என்பதை அரசாங்கம் உணர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

"உணவுத் தானியங்கள் மீது வரி போடுவதற்கு காங்கிரஸ் எதிர்ப்பு தெரிவித்துவந்துள்ளது இந்திய நிதியமைச்சரும் உணவுத் தானியங்கள் மீது வரி போடக்கூடாது என்று ஆலோசனை கூறியுள்ளார். இப்படி காங்கிரஸ் விரும்பாத—மத்திய நிதி அமைச்சரும் ஆதரிக்காத முறையில் உணவுத் தானியங்கள் மீது வரி போடுவதைவிட, அதை உடனடியாக எடுத்து விட்டு, அதற்கு ஈடாக வேறுவகையில் வரி போட்டுக்கொள்வது பொருத்தத்தக்கதாகும்.

"இதற்குப் பல வேறு வழிகள் உண்டு. குறிப்பாக, நகரங்களுக்கு வெளிப் பகுதியிலிருந்துவரும் பொருள்கள் மீது ஒரு தனி வரி போடலாம்.

"வியாபாரிகளின் வருமானம் ரூ. 20,000-க்குக் குறைவாக இருப்பதைக் கணக்கெடுத்து சில பிரிவுகளாகப் பிரித்து, அவர்களிடம் இந்த வரியை வசூலிப்பதற்கு மாறாக, ஒரு குறிப்பிட்ட வரி விகிதத்தை நிர்ணயித்து அதன்படி அந்த வரியை 'நாமினல் டாக்ஸ்,' என்ற அளவில் வசூலிக்கலாம்.

"அன்றாட வாழ்க்கைக்குத் தேவைப்படும் தவிர்க்க முடியாத — அவசியமான பொருள்கள்மீது வரி வசூலிப்பதை ரத்து செய்து, சாதாரண பொருள்களுக்கு வரி போட்டும், ஆடம்பரப் பொருள்கள்மீது அதிக வரி போட்டும் வரி விதிப்பு முறையை ஒழுங்கான முறையில் அமுல் செய்தால், இப்போது வசூலாகும் அளவைவிட மூன்று மடங்கு அதிகமாக வரி வசூலாகும் என்று நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

"குதிரைப் பந்தயத்திற்கும் திரைப்படங்களுக்கும் அதிக வரி போடவேண்டும் என்று சிலர் யோசனை கூறுகின்றனர். என்னைப் பொறுத்தவரையில் நான் வரவேற்கிறேன். இத்துடன், ஆலயத்தில், அர்ச்சனைக்கு வசூலிக்கப்படும் கட்டணத்தையும் அதிகப்படுத்தினால்கூட நான் எதிர்க்கமாட்டேன்."

கழகக் கூட்டம்

★

திருக்கோவிலூர்:
மார்க்கெட் தெருவில்
12—7—57 மாலை 6 மணிக்கு

தலைவர்:
டி. என். ஜி. அண்ணாமலை

பேசுவோர்:
இரா. நெடுஞ்செழியன்
காஞ்சி-கல்யாணசுந்தரம்
ஏ. கோவிந்தசாமி எம்.எல்.ஏ.
சி. நடராசன் எம்.எல்.ஏ.

திருக்கோவிலூர் வட்ட தி.மு. கழக தோழர்களுக்கு--நிருவாகிகளுக்கு:

12—7—57 காலை 10-மணி அளவில் திருக்கோவிலூர் வட்ட வழிபோக்கர் விடுதியில் பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையில் நம் வட்ட செயற்குழுக் கூட்டம் நடைபெறும். அதுபோது கழக உறுப்பினர்கள்—நிருவாகிகள் வருகை தருமாறு கோரப்படுகிறார்கள்.

என். வி. நடராசன்

சுற்றுப்பயணம்

ஜுலை
12: காலை—தெலுங்கன்குடிக்காடு
மாலை—அதிராம்பட்டினம்
13: எட்டிமுழையூர் (மன்னார்குடி)
14: திருக்கோகர்ணம் (புதுக்கோட்டை)
15: களங்காணி (இராசிபுரம் வட்டம்)
மாலை 3 மணி— கழகத் திறப்புவிழா
இரவு 7 மணி—பொதுக் கூட்டம்
16: குமாரபாளையம் (இராசிபுரம் வட்டம்)

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா நெடுஞ்செழியன் எம்.ஏ